**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08022023-6729

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.08.2023

Accepted: 24.09.2023

Published: 01.10.2023

Citation:
Periyaswamy, B. "Valliakan - A Review." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 2, 2023, pp. 66–75.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6729

*Corresponding Author:
periyaswamydeva@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Valliakan - A Review

**B. Periyaswamy**
*Assistant Professor, Department of Tamil*
*Dr. MGR Chockalingam Arts College, Arni*
*https://orcid.org/0000-0002-7395-9699*

**Abstract**

Deity is not just belief. It depends on our culture and cultural values. If we lose the God we worship and the system of worship, we lose all of the above. Therefore, if a man loses faith in his race he must also lose faith in his God. To lose such is the social invasion of proselytizing or proselytizing. With the rise of Vedic religions, we abandoned our clan deity and village deity worship. By this we give up our individuality and the continuity of our ancestors and their worship. This article has researched and revealed about the worship of Valliakkan that was abandoned and that Valliakkan is the husband of Valli.

**Key Words:** Valliakkan, Kavadi. Murugan, Valli's Husband, Cults, Beliefs about the Origin of Kavadi, Contemporary Status.

**References**

1. htt://yarl-com.
2. http://geethaman jari- blogspot .com.
3. https: //ta. wikipedia. org/ wiki/ % E0% AE% 95% E0% AE% BE% E0% AE% B5% E0% AE% 9F% E0% AE% BF% E0% AE% AF% E0% AE% BE% E0% AE% 9F% E0% AF% 8D% E0% AE% 9F% E0% AE% AE% E0% AF% 8D.
4. Kalam Magazine, Issue 26, 2006, June.
5. Gunasekaran. Karu. Azha., Traditional Arts of Tamil Land, Mitra Arts and Creations, Chennai. 2004.
6. Ravindran, Southvisham Book house, Chennai – 2021, Religion and Marxism in Tamil Cultural Perspective.
7. N. P. Puranachandra Jiva "Tamil before Indus" Research results of Indus. Tayyal Publishing House Chennai 2004.
8. Perumal. A. Ka., Ramachandran. Na. (Eds.), Natar Performing Arts: A Repository, Tamil Nadu National Theater Society, Chennai, 2001.
9. Prof. K. Indrabala (Ed.), Thought and Work of Swami Gnanaprakasar, Jnanaprakasar Memorial Convocation Committee, Jaffna, 1981.
10. P. Raghupathi, Valliakan and Vallipuranath, Pulari Reprint, 2006.
11. Dr. B. Periyaswamy, Na. Vaman(Ed.), The. Selvamanogaran (A.a), Multifaceted Perspectives on Folklore (2023), Prabha Publishing House, Vellore.
12. Impact of Unwritten Laws and Customs in Jaffna Society on That Community and Their Human Rights, Library Institute, 2014.

# வல்லியக்கன் : ஒரு மீள்பார்வை

*முனைவர் பீ. பெரியசாமி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, ஆரணி

***ஆய்வுச் சுருக்கம்***
*தெய்வவழிபாடு என்பது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல. அது பண்பாட்டு விழுமியங்களைச் சார்ந்தது. வழிபடு கடவுளரையும் வழிபடு முறைமையையும் இழந்துவிட்டோமானால் மேற்கூறிய அனைத்தையும் இழந்துவிடுவோம். எனவே, மனிதன் தன் இனத்தின் மீதான நம்பிக்கையை இழக்க வேண்டுமானால் கடவுள் மீதான நம்பிக்கையையும் இழக்க வேண்டும். வைதிக குலதெய்வ, கிராம தெய்வ வழிபாடுகள் பின் தங்கியுள்ளன. விட்டொழிக்கப்பட்ட வல்லியக்கன் வழிபாடு பற்றியும் வல்லியக்கன் என்பது வள்ளியின் கணவன் என்பதே என்பதையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*
***முக்கியச் சொற்கள்:*** *வல்லியக்கன், காவடி. முருகன், வள்ளியின் கணவன், வழிபாட்டு முறைகள், காவடியின் தோற்றம் குறித்த நம்பிக்கைகள், சமகால பயில்வுகள்.*

**முன்னுரை**

கடவுள் வழிபாடு என்பது நம்பிக்கையின் விளைவாகவும், பயத்தின் காரணமாகவும் ஏற்பட்ட ஒன்று. சங்ககால வெறியாட்டு நிகழ்வையே உதாரணமாக எடுத்துக் கொண்டால் தலைவிக்கு முருகனால் துயர் நேர்ந்தது என்றவழி வேலனால் வெறியாட்டு நடத்தப்பட்டது. வைதிக சநாதன சமயங்களான சைவ, வைணவ மதங்களிலும் மக்கள் ஈடுபாடு கொண்டனர். இங்கு காலகாலமாக வழிபட்டு வந்த இயற்கை வழிபாட்டையும் (விரிச்சி கேட்டல், நடுகல் வழிபாடு, குலதெய்வ வழிபாடு), கிராமியவழிபாட்டையும் (மாரியம்மன். காளியம்மன், முருகன், முனீஸ்வரன்) சிறு தெய்வங்கள் என ஒதுக்கி விட்டு வைதிக சமயக் கடவுளர்களான சிவன், விஷ்ணு, பார்வதி, லட்சுமி போன்ற தெய்வங்களை வழிபட்டனர் இதன்காரணமாகப் பல கோயில்கள் தமிழகத்தில் கால ஓட்டத்தில் காணாமல் போயின. இன்று குலதெய்வங்கள் தெரியாத குடும்பங்கள் ஏராளமாகப் பல்கிப் பெருகிவிட்டன. முன்னோர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்றும் எங்கோ இருந்து யாரோ கொண்டு வந்த வைதிக வழிபாடு பெருந்தெய்வ வழிபாடு என்றும் எப்போது நாம் நம்ப ஆரம்பித்தோமோ அப்போதே வழிபாட்டு மரபையும் பண்பாட்டையும் இழந்துவிட்டோம். வல்லியக்கன் எனும் வழிபாடு எவ்வாறு காணாமல் போனது ஒரு சமூகத்தின் பண்பாடு எவ்வாறு சீரழிவிற்கு உள்ளானது என்பதையும் வல்லியக்கன் - வள்ளியின் கணவன் எனவும் இக்கட்டுரை நிறுவுறுகின்றது.

**வல்லியக்கன்**

பொ.ரகுபதி தமது "வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்" எனும் கட்டுரையில், இலங்கையின் வட பகுதியில் பழமையான யக்ஷ வழிபாட்டில் இருந்து வந்த, வல் + இயக்கன், அதாவது வலிமையான இயக்கின் என்று பொருள்படும் வல்லியக்கன் கோயில்கள் பின்னர் பார்ப்பனியமயப்படுத்தப்பட்டு கிருஷ்ணன் கோயிலாகவும் (நெல்லியடி), பெருமாள் கோயிலாகவும் (வல்லிபுரநாதர் கோயில் - கோண்டாவில்) மாற்றப்பட்டிருக்கின்றன என்கிறார். இதுதவிர மனிப்பாய், உடுவில், சங்கானை, வேலனை என்று நிறைய இடங்களில்

இன்னமும் வல்லியக்கன் கோயில்கள் வேறுவேறு பெயர்களுடனும் இன்றளவும் இருக்கின்றன. (காலம் இதழ், இதழ் 26, 2006, யூன், பக். 28-36) என்று தெரிவித்துள்ளார். வள்ளுவ சமூகத்திற்கு என்று தனியான கோவிலும் தெய்வமும் உண்டு. இந்து சமயத்தோடு தொடர்பற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் கோவிலை யாரும் போய் பார்ப்பதில்லை. தம் தெய்வம் வல்லியக்கன் என்றார்கள் (வல் + இயக்கன் =வல்லியக்கன்) சில ஆயிரம் ஆண்டுகள் கடந்து வந்த மரபு இப்போது மாறுகிறது. அண்மை காலத்தில் இக்கோயில்கள் வல்லிபுரநாதர் என்றும் வல்லியப்பர் எனவும் அழைக்கபட்ட இடத்தில். இன்று பிள்ளையாரப்பா என்றும், பிள்ளையார் என்றும் மாற்றப்பட்டிருக்கின்றன. கோண்டாவில், சங்கானை, கலிகை, காரை நகர், இருபாலை போன்ற இடங்களில் இக்கோயில்கள் உவ்வாறு மாறியுள்ளன. (http;//geethaman jari& blogspot .com/2015/04/blog&post&4.html?m=1)

இயற்கை - இயக்க - இயக்கன், இயக்கி வழிபாட்டின் வழி உருவான வழிபாடாக இரகுபதி இதனை இனங்காண்பதோடு யக்ஷ வழிபாட்டோடும் இணைத்துக் கருத்து உரைக்கின்றார். இயற்கை வழிபாடு உலகப் பொதுமைக்குமானது. இயற்கை எனும் தமிழ்ச்சொல் இயற்கை வழிபாட்டை குறித்து அது பின் இயக்க வழிபாடாக இயக்கன் - இயக்கி எனும் ஆண், பெண் வழிபாடாக வளர்நிலை பெற்றிருக்க வேண்டும். அதனை யக்ஷவழிபாட்டோடு இணைத்தல் அவசியமற்றது. வல்லியக்கன் எனும் பெயர் இருவகையில் உருவாகியிருக்கலாம். வல்லி + இயக்கன் - வல்லி எனும் பறையர்குல மூதாதையால் வழிபடப்பட்ட தெய்வம் வல்லியக்கன் எனக் கூறப்பெற்றிருக்கலாம். ஏனெனில் வல்லி, வல்லியப்பன் எனும் பெயர்கள் இன்றும் பறையர்குல மக்களிடம் செல்வாக்குடன் காணப்படுகின்றன. வல்லியின் வழித்தோன்றல்கள் வல்லியக்கனை வழிபடுகின்றனர். வலிமை பொருந்திய இயக்கன் என்ற நம்பிக்கையின் வழி உருவான பெயராக இப்பெயர் அமைந்திருக்கிறது. (பீ. பெரியசாமி, நா.வாமன் (ப.ஆ), தி. செல்வமனோகரன் (க.ஆ),நாட்டுப்புறவியல் பன்முகப் பார்வை (2023), பிரபா பப்ளிஷிங் ஹவுஸ், வேலூர், பக். 3-4) கிருஷ்ணன் கோயில் என்ற அடையாளம் துலங்கத் தொடங்க வல்லியக்கன் கோயில் பற்றி யாருக்குமே தெரியாமல் போய்விட்டது. அப்படியே பச்சிலைப்பள்ளி என்ற பெரும் பிரதேசத்தைப் பற்றிய நினைவுகளும் அடையாளமும் மாறிவிட்டன. (htt://yarl&com april 27/2014, இயக்கச்சி - காணாமற் போன வல்லியக்கன் by கிருபன்)

**மேலும் அவர்,**

**“கன்னாபுரம் நின்று அந்நாள் நடந்து**
**கருதரிய ஏழாலை அதில் மீதுறைந்து**
**புன்னாலைக் கட்டுவன் அச்செருக்**
**கொப்பாய்**
**புத்தூர் வறுத்தலைவிளான்**
**பளையிரண்டும்**
**மன்னார் சுளிபுரம் சங்காளை தோல்வரம்**
**மற்றுமுள தேசங்களிலெல்லா முறைந்து**
**சுன்னாகம் வாழவரு வல்லியக்கரசனை**
**தொழுவோர்கள் பலவினை தொலைந்து**
**போமே”**

***(பேராசிரியர் கா.இந்திரபாலா (பதி), சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும், ஞானப்பிரகாசர் நினைவு விழா அழைப்புக்குழு, யாழ்ப்பாணம், 1981, ப.6)***

என்னும் கிராமியப் பாடலின் வழியே, பறையர் மத்தியில் வல்லியக்கன் என்ற தெய்வத்திற்கே முதலிடமுண்டென்றும் அதற்குரிய கோயில்களும் இருந்துள்ளன என்றும் (அதே சந்தர்ப்பத்தில் பறையர் செறிந்து வாழும் கிராமங்களும்) என்றும் தெளிவுப்படுத்தியுள்ளார். இப்பாடல் ஈழ நிலத்தின்வடபுலத்தில்வல்லியக்கன்கோயில் இருந்த இடங்களைப் பட்டியற்படுத்துகின்றது.

கன்னாபுரம், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, கோப்பாய், புத்தூர், வறுத்தலைவிளான், பளை இரண்டும், மன்னார், சுழிபுரம், சங்கானை, தொல்புரம், சுன்னாகம் என்பன அவையாம். இவற்றுள் தெல்லிப் பழையில் ஆலயமுண்டு. கிளிநொச்சி மாவட்ட பளை, விடத்தற்பளை மற்றும் இயக்கச்சி பிரதேசங்களில் வல்லியக்கனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சங்கானை கோயில் அழிக்கப்பட்டுவிட்டது. அது போலவே தொல்புரம், சுழிபுரம், சுன்னாகம், மன்னார் கோயில்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. குடிசன பரவலாக்கத்தின் வழி உருவான வேலணை சின்னமடு, நவாலி, சண்டிலிப்பாய், இருபாலை, அச்செழுவின் புதியகோயில் போன்றன கள ஆய்வினூடாகப் புதிதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சி. ஜெயசங்கர் தம்பலகாமம் உள்ளிட்ட இடங்களில் வல்லியக்கன் வழிபாடு உண்டு என்கிறார். ஆயினும் அதனை இவ்வாய்வை எழுதும் வரை உறுதிப்படுத்த முடியவில்லை. வல்லியக்கன் கோயில்கள் தனிக்காணிகளிலும் வீட்டுவளவுகளினுள்ளும் அமைந்துள்ளமை இது ஒரு குலதெய்வவழிபாடு என்பதை உறுதிப்படுத்துகின்றது. கோயிலாக இல்லாமல் ஆலமரம், நாவல் மரம், மஞ்சவுண்ணா, பூவரசு போன்ற மரங்களின் கீழ் வல்லியக்கன் அமர்ந்திருந்தார். கல் - மயோசியன் கல் (வெள்ளைக்கல்) சூலம் போன்ற பருப்பொருட்களின் ரூபத்தில் அவர் வழிபடப்பட்டுள்ளார். மரங்களின்கீழ் திறந்தவெளியிலும் சீமெந்துக் கட்டடங்களிலும் இக்கோயில்கள் அமைந்துள்ளன. இத்தெய்வத்தின் இணைத்தெய்வமாக முடி மன்னர் (கோண்டாவில், அச்செழு, ஏழாலை) காணப்படுகிறார். இதைவிட இணைத் தெய்வங்களாக காளி (நவாலி), விறுமர், ஐயனார் (கரவெட்டி) என்பனவும் காணப்படுகின்றன. (பீ. பெரியசாமி, நா.வாமன் (ப.ஆ), தி. செல்வமனோகரன் (க.ஆ), நாட்டுப்புறவியல் பன்முகப்பார்வை (2023), பிரபா பப்ளிஷிங் ஹவுஸ், வேலூர், பக். 4-5) தொமரப் வன்றீ எனும் ஒல்லாந்த அதிபதி 1697-இல் எழுதிய அறிக்கைஒன்றில் ஒவ்வொரு சாதியினரும் கோயில்களில் பிரதிஷ்டை செய்யும் தெய்வங்களும் வேறுபட்டு இருந்தது. இதில் பறையன் - வள்ளியக்கன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்படும் எழுதப்படாத சட்டங்களும் வழக்காறுகளும் அச்சமூகத்திலும் அவர்களின் மனித உரிமைகளிலும் செலுத்தும் செல்வாக்கு, நூலக நிறுவனம், 2014, பக்.8-9)

கோண்டாவிலில் கேட்டால் தெரியலாம் என்று நானும் குகபரனும் வல்லிபுரநாதர் கோயிலுக்குப் போனோம். அங்கு நாம் கண்டதும் கேட்டதும் வியப்பூட்டுபவை. கோயிலோடு சேர்ந்த ஒரு சிலரைத்தவிர வேறெவருக்கும் முன்னர் இது வல்லியக்கன் கோயிலாக இருந்தது தெரியாது. இப்போது இது ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோயில், மூலவர் பெருமாள், வசந்த மண்டபம், உறசவ விக்கிரகங்களாகச் செப்புத் திருமேனிகள் பன்னிரு ஆழ்வார்கள். தேர், தேர்முட்டி என்று எல்லாம் அமையப் பெற்றிருந்தன. நாங்கள் போனது சனிக்கிழமை, ஆதலால் பெருமாளுக்கு உகந்த நாளென்று கனிசமான கூட்டம். இக்கோயில் நிர்வாகம் வள்ளுவ குலத்தவர்கள். ஆனால் பூசையர் பிராமணர். பூசையுள் வள்ளுவர், கருவறைக்கு உள்ளே போவது கிடையாது. (பொ.ரகுபதி, வல்லியக்கனும் வல்லிபுரநாதரும், புலரி மறு பிரசுரம், 2006, ப.6) என்று விவரிக்கிறார்.

வல்லியக்கன் கோயில் இந்த இடத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்ததல்ல. மூன்று தலைமுறைக்கு முன்னர் அச்செழு என்ற ஊரில் இருந்து வல்லியக்கன் கல்லை ஒருவர் இங்குக் கொண்டுவந்தார். குலப்புலப்பெயர்வுடன் இது நிகழ்ந்திருக்கக்கூடும். கோயில் சிறு கொட்டகையாக இருந்தது. வல்லியக்கனுக்குத்

துணைக் கோயில்களாக முடிமன்னருக்கும் அம்மனுக்கும் கொட்டகைகள் இருந்தன. திரிசூலங்களும் நடப்பட்டிருந்தன. பூசை செய்பவர் வாய்கட்டிப் பூசை செய்திருக்கிறார். 1976 வரை கோயிலில் பறை அடிக்கப்பட்டிருக்கிறது. வைகாசி விசாகப் பொங்கல், கும்பபூசை எனப்படும் நவராத்திரி, திருவெம்பாவை முதலியான முக்கிய திருவிழாக்களாகவும், சைவ பஞ்சபுராணம் பாடும் மரபும் இருந்திருக்கின்றன.1976-இல் கோயிலை பிரித்துக் கட்டியபொழுது, வல்லியக்கன் எனும் பெயர் வல்லிபுரநாதர் என அப்போதிருந்த சீத்தாராம சாஸ்திரிகளால் மாற்றப்பட்டுள்ளது. இக்கோயிலை கோண்டாவிலில் இருந்த ஸ்தபதி சோமசுந்தரம் கட்டிக் கொடுத்தால் திருநெல்வேலி, சீவரத்தினம், தேர் அமைத்தார் 1981 - இல் குடமுழக்கு பிராமணர்களால் நடத்தப்பட்டு கொடியேற்றித் திருவிழா நடைபெற தொடங்கியது (பொ.ரகுபதி. வல்லியக்கனும் வில்லிபுரநாதரும், புலரி, மறுபிரசுரம்-2006, பக்.7-8) சங்கானை வல்லியக்கன் கோயில் காடு மண்டிப்போய், ஒரு வளவுக்குள் இருந்தது. கருவறையும், முகமண்டபமும் கொண்ட, சிறிய, ஓடு வேய்ந்த கட்டிடம், பாழடைந்து, ஓடும் விழுந்து, ஒட்டடை பிடித்து இருந்தது. செவ்வக வடிவில், நிலைக்குத்தாக நடப்பட்டிருந்த வெள்ளைச் சுண்ணாம்புக்கல்தான் வல்லியக்கன். பக்கத்தில் ஒரு சூலமும் இருந்தது. கற்பூரத்தட்டு, விளக்கு முதலியவை பாசிப்பிடித்துக் கிடந்தன. அதன்மூலம் நெடுங்காலமாக உள்ளே ஒருவரும் போகவில்லை என்று தெரிந்தது கொள்ளமுடிந்தது.(மேலது.ப.9) உடுவிலில், வல்லியக்கன் கோயிலில் முன்பு நாவல்மரம் இருந்ததென்றும் அதை மூடியே ஆலமரம் வளர்ந்ததாகவும் வல்லியக்கனுக்கு தாங்கள் வாய்கட்டி பூசை செய்வதாகவும், ஆலமரத்தில் பல நாக பாம்புகள் குடி கொண்டுவிட்டதால் தாங்கள் அங்கு குடியிருப்பதைவிட்டு வெறியேறி விட்டதாகவும். கோயில் முன்பு இருக்கும் கிருஷ்ணர் சிலை பல ஆண்டுகளுக்கு முன்பே வைக்கப்பட்டுவிட்டதையும் அறிந்தோம். 1950-களில் நெல்லியடி வல்லியக்கன் கிருஷ்ணர் ஆகிய பொழுது இது நடந்திருக்கலாம். (மேலது.ப.12) ஆனைக்கோட்டை வல்லியக்கன், பெயர் மாற்றப்படவில்லை. மூலவராகிய கல்லும் மாற்றப்படவில்லை. ஆனால் வீட்டோடு கோயில் கட்டி, கருவறை வாசல் இருபுறமும் சங்குசக்கரச் சின்னங்கள் அமைத்து வைஷ்ணவ மயப்படுத்தப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. பெரிய ஆலமரம் முன்னர் இருந்தது. இப்பொழுது இல்லை. வாய்கட்டி, வள்ளுவரே பூசை செய்கின்றனர். முன்பு பறையும் அடிக்கப் பட்டது. (மேலது, ப.15) அண்ணன்மார், விருமன், பத்திரகாளி, வல்லியக்கன் என நாட்டார் வழிபாட்டுக் கோயில்கள் பரவலாக யாழ்ப்பாணம் முழுமையிலும் உண்டு. வளர்ச்சி நிலைக்குச் சாத்தியமிருந்த உயர்சாதியினரின்பலிபெறும்கோயில்களில் பலியை ஒழித்துப் பெருந்தெய்வ வழிபாட்டுக் கோயிலாக்கும் முயற்சி இருந்தது. (ந.இரவீந்திரன், சௌத்விஷம் புக்ஸ், சென்னை - 2021, மதமும் மார்க்சியமும் தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை, ப.48)

### வழிபாட்டு முறைகள்

வல்லியக்கனை வழிபடும் முறைகள் பிரதேச வழக்காறுகளுக்கேற்ப சிற்சில மாறுபாடுகளுடன் காணப்படுகின்றன. சில இடங்களில் நித்தம் "விளக்கு வைக்கும்" வழக்கம் உண்டு. ஆனால் பல ஆலயங்களில் வெள்ளிக்கிழமை, விஷேட நாட்கள் போன்ற குறித்த நாட்களில் மட்டும் இவ்வழக்கம் காணப்படுகின்றது. எல்லாக் கோயில்களிலும் "வைகாசி விசாகம்" மிகச்சிறப்பாகப் பொங்கல் வைத்துப் பூசித்து வழிபடப்படும் நாளாகக் காணப்படுகிறது. நாட்டார் தெய்வங்களுக்குப் பொதுவில் வைகாசி விசாகதினம் குளித்தியாக, பொங்கல் நாளாக, மடை நாளாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன்னின்றும் மாறுபட்டு ஏழாலை வல்லியக்கனுக்கு சித்திரை

மாத நான்காவது புதன்கிழமை விஷேட நாளாகக் கருதப்பட்டு மடைப்பண்டம் எடுக்கப்பட்டு பொங்கி வழிபடப்படுகின்றது. கரவெட்டி கோயிலில் பங்குனி கடைசிப் புதன் விஷேட நாளாகும். மடைப்பண்டம் எடுக்கும் மரபு எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. மடைப்பண்டம் எடுக்கும் முதல்நாள் ஆலயச்சூழல் தூய்மைப் படுத்தப்படும். “விளக்கு வைத்தல்” நிகழும். விளக்கு வைப்பவர், பூசை செய்பவர் பறையிசைக்கும்; மக்களில் ஒருவராக இருப்பார். இந்நிகழ்வின் பூசாரியாக அவர் திகழ்வார். ஆனைக்கோட்டை போன்ற சில கோயில்களில் வாய்கட்டிப் பூசை செய்யும் முறைமையும் உண்டு. இது கப்புறாளை (கதிர்காமம்), கப்பூகர் (மண்டூர்க்கதிர்காமம், செல்வச்சந்நிதி) எனும் வாய்கட்டி பூசை செய்யும் முறையின் செல்வாக்கால் வந்திருக்கக் கூடும். (முனைவர் பீ. பெரியசாமி, நா. வாமன் (ப.ஆ), தி. செல்வமனோகரன் (க.ஆ), நாட்டுப்புறவியல் பன்முகப் பார்வை (2023), பிரபா பப்ளிஷிங் ஹவுஸ், வேலூர், பக். 5-6)

பொங்கலுக்கு உரிய பண்டங்கள், பாத்திரங்கள் இணைத் தெய்வங்களின் ஆலயங்களில் வைத்துப் பூசை செய்யப்பட்டு புனிதப்படுத்தப்பட்டு வல்லியக்கன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும். மடைப் பண்டம் கொண்டு செல்லப்படும்போது மடைப்பறை இசைக்கப்படும். ஆலயங்களின் நிகழ்வுகளுக்கு இசைக்கவெனத் தனிப்பறையும் தனியான இசைப்பு முறையும் கலைஞர்களும் இருந்ததாக அறியமுடிகிறது. இது மங்கல இசையாக, பறை சாற்றுதலாக, இது கூறப்படுகிறது. பலியிடும் வழக்கம் இருக்கவில்லை என எல்லா ஆலயக்காரர்களும் உறுதிபட உரைக்கின்றனர். கரவெட்டி கோயிலில் மட்டும் ஆலயத்துக்கு அப்பால் உள்ள சந்தியில் வைத்து மடைப்பண்டம் எடுப்பதாகவும் மடைப்பண்டம் எடுக்கும் போது கோழியறுத்தல் எனும் பலி நிகழ்த்தப்படுவதாகவும் நேர் காணல் (சி.அருணகிரிநாதன், வயது 61) மூலம் அறிய முடிந்தது. வல்லியக்கனை வழிபடுதலினூடாக சந்ததி பெருக்கம், நோய் நொடியில் இருந்து விடுபடுதல் போன்ற நம்பிக்கைகள் காணப்படுகின்றன. தமது நேர்த்தி நிறைவுறும்போது நேர்த்திக்கடன் செலுத்தும் முறை காணப்படுகிறது. இது தெய்வக்கடன் என்றே கூறப்படுகிறது. பொங்குதல், மடைபரவுதல் போன்றன அவற்றுட்சில. மட்சம், மாமிசம் படைப்பதில்லை. தற்போது காவடியெடுத்தல் போன்றனவும் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாலய விஷேட தினங்களில் கலையாடி, குறிசொல்லல், திருநீறு போடுதல் போன்றனவும் நிகழ்த்தப்படுகின்றன. (முனைவர் பீ. பெரியசாமி, நா.வாமன் (ப.ஆ), தி. செல்வமனோகரன் (க.ஆ), நாட்டுப்புறவியல் பன்முகப் பார்வை (2023), பிரபா பப்ளிஷிங் ஹவுஸ், வேலூர், ப. 6-7).

**காவடியாட்டம்**

காவடியாட்டம் என்பது முருக வழி பாட்டுடன் தொடர்புடைய ஒரு ஆட்டம் ஆகும். இந்த ஆட்டத்தில் ஆடுபவர் காவடி எனப்படும் பொருளைத் தோளில் வைத்துக் கொண்டு ஆடுவார். இலங்கையிலும், தமிழ் நாட்டிலும், தமிழர் வாழும் பிற நாடுகளிலும் உள்ள முருகன் கோயில்களில் வழிபாட்டின் ஒரு கூறாகக் காவடியாட்டம் இடம்பெறுகிறது. முருகன் கோவிலுக்குச் சென்று காவடி எடுப்பதாகப் பக்தர்கள் நேர்த்தி வைப்பது உண்டு. கோவில்களில் காவடி எடுப்பதில் இளவயதினரிலிருந்து பெரியவர் வரையிலான பலரும், பங்கேற்பர். வழிபாட்டின் கூறாகத் தோன்றிய காவடியாட்டம் பிற்காலத்தில் தொழில்முறை ஆட்டமாகவும் வளர்ச்சி பெற்றது. எனினும் வழிபாட்டுத் தொடர்பான காவடியாட்டம் அல்லது காவடியெடுத்தல் இன்னும் பரவலாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது. தொழில்முறைக் காவடியாட்டம் பொதுவாகக் கரகாட்டத்தின் ஒரு துணை ஆட்டமாக இடம் பெற்று வருகின்றது.

(குணசேகரன். கரு. அழ., தமிழ் மண்ணின் மரபுக்கலைகள், மித்ர ஆர்ட்ஸ் அன்ட் கிரியேசன்ஸ், சென்னை. 2004. ப. 26)

## சொற்பிறப்பு

கா அடி என்பது காவாகச் சுமக்கப்படும் (முருகப்பெருமானின்) திருவடி. கா என்பது இருபுறமும் தொங்கும் சுமை. "காவடியாட்டம்" என்பது "காவடி", "ஆட்டம்"என்னும் இரு சொற்களின் சேர்க்கையால் உருவானது. காவடி என்பது ஆட்டத்துக்கான கருவி என்பதால், இவ்வாட்டத்தின் பெயர் அதற்கான கருவியின் அடியாக எழுந்தது எனலாம். "காவடி" என்னும் சொல் "காவுதடி" என்பது மருவி உருவானதாகக் கருதப்படுகின்றது (பெருமாள். அ. கா., இராமச்சந்திரன். நா. (பதிப்பாசிரியர்கள்), நாட்டார் நிகழ்த்துக் கலைகள்: களஞ்சியம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை, 2001. ப. 157). சுமை காவுபவர்கள் இலகுவாகச் சுமப்பதற்காக, ஒரு நீண்ட தடியின் இரு முனைகளிலும் சுமைகளைத் தொங்கவிட்டு அத்தடியின் நடுப்பகுதி தோளில் இருக்குமாறு வைத்துச் சுமந்து செல்வர். காவுவதற்கான தடி என்னும் பொருள்பட இத் தடியைக் காவுதடி என அழைப்பர்.

## காவடியின் தோற்றம் குறித்த நம்பிக்கைகள்

காவடியின் தோற்றம் சிந்து சமவெளி காலத்தில் உருவாகியிருக்கலாம் என சான்று கிடைக்கிறது. சிந்துவில் கிடைத்த சித்திர வடிவ எழுத்துகளில் காவடி எடுப்பதை போன்ற தோற்றமும் உள்ளது .அதற்கு கொடுக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் மற்ற வார்த்தைகளுக்கும் பொருந்தி வருவதால் சிந்து எழுத்து தமிழே என்று "சிந்து வெளியில் முந்துதமிழ்" என்றநூலில்நா.ப.பூரணச்சந்திர ஜீவா பல்வேறு சான்றுகளுடன் விளக்குகிறார். மேலும் சமயத் தொடர்புள்ள விடயங்களின் தோற்றங்கள் தொடர்பில் கதைகள் இருப்பது போலவே காவடியின் தோற்றம் குறித்தும் கதை ஒன்று உள்ளது (நா.ப.பூரணச்சந்திர ஜீவா "சிந்து வெளியில் மூந்து தமிழ்" சிந்து வெளி ஆராய்ச்சி முடிபுகள். தய்யல் பதிப்பகம் சென்னை 2004, ப.56). இதன்படி, அகத்திய முனிவரின் வேண்டுகோளுக்கு அமைய சூரபத்மனின்நண்பனும்முருகபக்தனுமான இடும்பன், சிவகிரி, சக்திகிரி என்னும் இரண்டு மலைகளைக் காவுதடியில் சுமந்து கொண்டு பொதிகைமலை நோக்கிச்சென்றானாம். பழநியில் சுமையை இறக்கி வைத்துவிட்டுப் இளைப்பாறிப் பின் மீண்டு தூக்க முயற்சித்த போது தூக்க முடியவில்லையாம். அப்போது சிறுவனாக உருக்கொண்டு வந்த முருகப் பெருமான் மலைமேல் இருந்து இடும்பனைக் கேலி செய்யவே சிறுவனை நோக்கிப் பாய்ந்த இடும்பன் தவறி மலையில் இருந்து உருண்டு இறந்தான். பின்னர் அவனை உயிர்ப்பித்த முருகன், இடும்பனின் கோரிக்கைக்கு இணங்கி, இடும்பன் அங்கே காவல் தெய்வமாக இருக்கவும், கோயிலுக்கு காவுதடி (காவடி) எடுத்துவரும் பக்தர்களின் குறைகள் தீர்ந்துவிடவும் வரம் அளித்தாராம். அதிலிருந்து, முருக வழிபாட்டில் காவடி எடுத்தல் ஓர் அம்சமாக ஆகியது எனவும், அக்காவடியை கோவிலில் இடும்பன் சந்நிதியில் வைத்த பின்னரே எடுப்பது என்னும் வழக்கம் உருவானது என்றும் கூறப்படுகின்றது. இக் கதையில் இருந்து காவடிக்கும், காவுதடிக்கும் உள்ள தொடர்பு புலப்படுவதையும் கவனிக்கலாம். இவற்றின் வழி காவடி என்ப முருகனுக்கே உரியது என்பது தெளிவு.

## சமகாலப் பயில்வுகள்

சாதிய ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி மிகவும் நசுக்கப்பட்ட நிலையில் தமது பொருளாதாரத்துக்கு மூலமாக இருந்த பறையை 1950 - 1970 இடையில் நடை பெற்ற முக்கிய நிகழ்வின் வழி உடைத்தும் எரித்தும் "இனி பறை இசைப்பதில்லை" எனச் சபதம் செய்து ஈழத்தின் வடக்குப் பிரதேசத்தில் பல பிராந்தியங்களில் பறைத்தொழில் கைவிடப்

பட்டது. பெருந்தெய்வ உருவாக்கம் - பெருங்கோயிற் பண்பாடு, சமஸ்கிருத மயமாக்கம் எனும் பிராமணர்க்குத் தம் கோயிலைக் கையளிக்கும் செயற்பாட்டின் வழி ஆலயங்களில் பறை வாத்தியம் வெளியேற்றப்பட்டு தவில் மங்கல வாத்தியமாக்கப்பட்டது. கிழக்கிலும் மலையகத்திலும் இன்றும் ஆலயங்களில் பறை ஓரளவேனும் இசைக்கப்படுகிறது. வடக்கில் செல்வச்சந்நதி போன்ற ஒருசில ஆலயங்களில் பறையர் குலமல்லாத இறையடியவர் பறை "அறை" கிறார். இவ்வாறான செயற் பாடுகளும் இலங்கையின் யாவருக்குமான இலவசக்கல்வி, இலவச உணவு, இலவச உடை, இலவச வைத்தியசாலை போன்ற செயற்றிட்டங்கள் எல்லாச் சமூகங்களையும் வலுப்படுத்தியது. அரசாங்க உத்தியோகத்தர்களை, நிலையான மாதச்சம்பளம், ஓய்வூதியம் பெறுகின்றவர்களை உருவாக்கியது. இவ்வாறு உருவான புதிய வர்க்கம், உயர் சாதியல்லாத மக்களிடம் "சாதிய நீக்கம்" - உறவு நீக்கம், அடையாள நீக்கம் எனும் உணர்வுகளை செயல்நிலைப் படுத்தத் தூண்டியது. இதற்கு பறையர்குலபடித்தவர்க்கமும்தப்பவில்லை. தம் குலமக்கள் இருந்த இடங்களை விட்டு நகரங்களையும் வேறு நிலங்களையும் நோக்கிப்பெயர்ந்தனர். குலதெய்வங்களைக் கைவிட்டனர். இதன்வழி வல்லியக்கன், "சைவம் அகலக்காலூன்றி நின்ற நிலத்தில்" வல்லிபுரத்தாழ்வார் ஆயினார். தாமே பூசைசெய்து வழிபட்ட வல்லியக்கனை பெருங்கோயில் வழி கட்டமைக்க முற்பட்டு சீதாராமசாஸ்திரிகளை நாடிய போது வல்லி எனும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு கோண்டாவில் வல்லியக்கனை வல்லிபுர ஆழ்வாராக மாற்றினார். கும்பாபிஷேகம் நிகழ்ந்து பிராமணர் கோயிலாக்கப்பட்டது. பறையிசைக்கும் மக்கள் கருவறைக்குள் செல்லுதல் தடைப்பட்டது. தாம் மேற்சாதியானதாக அம்மக்கள் நம்புகின்றனர். இதன்வழி வேலணை சின்னமடு வல்லியக்கன், நாராயணர் - கிருஷ்ணனாக மாற்றப்பட்டுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு இரகுபதி. யாழ்ப்பாண சைவ உயர் சாதியினர்க்கு எதிரான வைணவராக வல்லியக்கன் வழி பறையிசைமக்கள் மாறுவதாகவும், இதில் அம்பேத்கார் சிந்தனையின் சாயல் இருக்கக்கூடும் என்றும் கூறுகிறார் (இரகுபதி, பொ., 2006, பக்22 - 23). ஆனால் அச்செழுவிலுள்ள வல்லியக்கன் கடந்த 2021ஆம் ஆண்டில் சிவபெருமானாக மாற்றப்பட்டுள்ளமை இக்கருத்துக்கு எதிரானதாக அம்பேத்கார் வழி சிந்திக்காது மேனிலையாக்கம் எனும் கருத்தாக்க வழி நின்றதையே காட்டுகின்றது. இவ்வாறான மேனிலையாக்கங்கள் பிராமணரை முதன்மைப் படுத்துகிறது. மக்களை வெளித்தள்ளுகிறது. மடைப்பண்டம் எடுத்தல், மடைப் பறையிசைத்தல் முதலான பாரம்பரிய முறைகளை, கலைகளை, நம்பிக்கைகளைப் புறந்தள்ளி இல்லா தொழிக்கிறது.

சீமெந்துக் கற்களால் கட்டப்பட்ட வல்லியக்கன் கோயில்களில் விஷ்ணுவின் சங்குசக்கரம் (ஆனைக்கோட்டை) பிள்ளையார், முருகன், (சண்டிலிப்பாய்) விறுமர், ஐயனார் (கரவெட்டி) போன்ற சின்னங்கள், தெய்வங்கள் இடம் பிடித்து வருதலையும் சமஸ்கிருதமயமாதலுக்கான தூரம் அண்மிப்பதையும் அவதானிக்க முடிகிறது. பறையிசை என்பது இருமரபுக் கோயில்களிலும் இல்லை என்பது கோயிற் பறை இல்லாது ஒழிந்து போனதையும் சாவுப்பறை வாசிப்பவர் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக இருத்தலையும் அதுவும் தன்கலைப் பெறுமானத்தை இழந்து வருதலையும் சாவுப்பறையின் இடத்தை பாண்ட் வாத்தியம் ஆக்கிரமித்து வருதலையும் அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான பறையர்குல மக்கள் சாதிய - தன்னடையாள நீக்கத்திற்காகவும் வேறுசில நம்பிக்கைகள் தேவைகள் என்பனவற்றுக்காகவும் கிறிஸ்த்தவத்துக்கு (குறிப்பாக புரட்டஸ்தாந்தம்) மாறி வருகின்றனர்.

இதனால் ஆதித்திராவிடர்களுக்கான அடையாளங்கள், தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், கலைகள் கைவிடப்படுகின்றன. சமாந்தரமாக தமிழர் வரலாறுசிதைவுறுதலும்நிகழ்கிறது. (முனைவர் பீ. பெரியசாமி, நா.வாமன் (ப.ஆ), தி. செல்வமனோகரன் (க.ஆ), நாட்டுப்புறவியல் பன்முகப் பார்வை (2023), பிரபா பப்ளிஷிங் ஹவுஸ், வேலூர், பக். 7-8) எனத் தி. செல்வமனோகரன் கூறுவதிலிருந்து வல்லியக்கன் கோயில் எவ்வாறெல்லாம் சிதைவுற்று இன்று காணாமல் போன மக்களைப்போல அதுவும் அழிவுக்குள்ளாக்கப் பட்டுள்ளது என்பதை அறிய இயலுகிறது.

## முடிவுரை

வல்லியக்கன் - வல் + இயக்கன் என பொ. ரகுபதி பிரித்து வலிமையான இயக்கன் என பொருள் கூறியுள்ளார். இதை மற்றொரு நோக்கில் நாம் பார்க்க வேண்டியுள்ளது. லகரம் - ளகரமாகவும், ளகரம் - லகரமாகவும் மருவி வருதல் பல இடங்களில் நாம் காண்கிறோம். ணகரம், னகரமாக மருவி வருதலும் உண்டு. அந்த வகையில்

வள்ளியின் - கணவன் - வள்ளியக்கண் (வல்லியக்கன்) என வழங்கி இருக்கலாம். ஏனெனில். இன்றும் நம் கிராமங்களில் மகளின் கணவனை பெயரிட்டு அழைக்காமல் அந்த மகளின் பெயரைச் சொல்லி அவளின் கணவன் என அழைப்பதைக் காண்கிறோம். அந்த வகையில் வள்ளியின் கணவனான முருகனின் வழிபாடே பிற்காலத்தில் வல்லியக்கன் வழிபாடாக உருப்பெற்றிக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. அதேபோல் வைகாச விசாக நாள் முருகனுக்கு உகந்தது. காவடியெடுத்தல் என்பது தமிழ்ச் சமூக மரபில் முருக வழிபாட்டுக்கு மட்டுமே உரியது. அதேபோல் வல்லியக்கன் வழிபாட்டில் பலியிடுதல் இல்லை என்பது இதுமேலும் உறுதிபடுத்தப்பட உறுதுணையாக உள்ளது. சமகால முருக வழிபாட்டிலும் பலியிடுதல் கிடையாது என்பதை நாம் சற்றே கவனித்தாக வேண்டியதாய் உள்ளது. இயக்கி - இசக்கி; இயக்கன் - இசக்கன்; இயக்கக் கூடியன் - இயக்கன் வலிமையான படையை இயக்கியவன் - வல்லியக்கன். ஒருபடையை தலைமை தாங்கி வலிமையோடு இயக்கியவன் வல்லியக்கன் எனப்பட்டான் என்பதன், அடிப்படையில் தேவர் படையை வலிமையோடு தலைமை தாங்கி முருகனால் இயக்கப்பட்டு அசுரர்கள் கொல்லப்பட்டதையே நாம் சூரசம்ஹாரமாகக் கொண்டாடுகிறோம். அதனடிப்படையில் முருகனே அந்த வலிமையான இயக்கன் என்பது தெளிவு.

ஒரு சமூகத்தின் மீதான பண்பாட்டுப் படையெடுப்பு என்பது அவர்களின் வழிபாட்டு மீதான தாக்குதலே ஆகும். இது காலங்காலமாக ஆட்சியில் இருக்கும் சமூகம் தன் குடிகள் மீது வீசக்கூடிய ஒன்றே என்றாலும் இன்று எவ்வளவோ தொழிற்நுட்பங்களும் மனித உரிமைக் கழகங்களும் இருக்கும் சூழலில் கூட இவ்வாறாகத் தமிழ் மக்களின் மீதான பண்பாட்டு, கலாச்சார. நாகரிகத் தாக்குதல் என்பது மிகவும் கண்டனத்திற்கு உரியது. வல்லியக்கனை இதுநாள் வரை குலதெய்வமாக வழிபட்டு வந்த மக்கள் தொடர்ந்து வழிபடவும். தன் இயல்பை, அடையாளங்களை இழந்துபோன வல்லியக்கன் கோயில்களை மீட்டெடுத்துப் புணரமைத்து வழிபாட்டுத் தலமாக மாற்றி அனைவரையும் வழிபட செய்வது தமிழ்மக்கள் அனைவரின் கடனாகும். எங்கோ நடக்கிறது யாருடைய குலதெய்வமோ என்று நாம் ஒதுங்கிச் சென்றுகொண்டே இருந்தால் கால ஓட்டத்தில் நம் பண்பாடும் கலாச்சாரமும் கண் முன்னே அழிவதைப்போல் ஒரு நாள் நம் மொழியும் நாமும் அழிவதை யாராலும் தடுக்கவியலாது என்பது உண்மை.

## துணைநூற்பட்டியல்

1. htt://yarl & com.
2. http://geethaman jari& blogspot. com.
3. காலம் இதழ், இதழ் 26, 2006,யூன்
4. குணசேகரன். கரு. அழ., தமிழ் மண்ணின்

மரபுக்கலைகள், மித்ர ஆர்ட்ஸ் அன்ட் கிரியேசன்ஸ், சென்னை.

5. ந.இரவீந்திரன், தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை. மதமும் மார்க்சியமும் சௌத்விஷம் புக்ஸ், சென்னை, 2021.
6. நா.ப.பூரணச்சந்திர ஜீவா "சிந்து வெளியில் முந்து தமிழ்" சிந்து வெளி ஆராய்ச்சி முடிபுகள். தய்யல் பதிப்பகம் சென்னை 2004.
7. பெருமாள். அ. கா., இராமச்சந்திரன். நா. (ப-ஆ, நாட்டார் நிகழ்த்துக் கலைகள்: களஞ்சியம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை, 2001.
8. இந்திரபாலா. கா. (பதி), சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும், ஞானப்பிரகாசர் நினைவு விழா அழைப்புக்குழு, யாழ்ப்பாணம், 1981.
9. ரகுபதி, பொ. வல்லியக்கனும் வல்லி புரநாதரும், புலரி மறு பிரசுரம், 2006.
10. முனைவர் பீ. பெரியசாமி, நா.வாமன் (ப.ஆ), தி. செல்வமனோகரன் (க.ஆ), நாட்டுப்புறவியல் பன்முகப் பார்வை (2023), பிரபா பப்ளிஷிங் ஹவுஸ், வேலூர்.
11. யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்படும் எழுதப்படாத சட்டங்களும் வழக்காறுகளும் அச்சமூகத்திலும் அவர்களின் மனித உரிமைகளிலும் செலுத்தும் செல்வாக்கு, நூலக நிறுவனம், 2014.